

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 20.03.2025 | மதுரை வடக்கு | சோழவந்தான் | சந்தை அருகில், வாடிப்பட்டி | **நாஞ்சில் சம்பத்,** அ.செசிலின் சந்தியா தீப்தி |
| 2 | 20.03.2025 | விழுப்புரம் வடக்கு | செஞ்சி | அப்பம்பட்டு | **பொன்.முத்துராமலிங்கம்,** குடிஅரசு |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 16–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.3.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் சி.பெர்னான்டஸ் ரத்தின ராஜா, அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகன் டாக்டர் மேத்யூ எபன் – டாக்டர் சிந்தியா ஆகிய புதுமணத் தம்பதியுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



புதுடெல்லியில், நேற்று முன்தினம் மாலை, நடைபெற்ற ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் அவர்களின் புதல்வர்கள் மணவிழாவில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கரூர் வடக்கு பகுதி திமுக, வடக்கு பகுதி திமுக இளைஞரணி, கரூர் வெங்கமேடு வி.வி.ஜி நகரில் நடத்திய மாபெரும் கிரிக்கெட் திருவிழாவை கரூர் மாவட்ட கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். பகுதி கழக செயலாளர் கரூர் கணேசன், கரூர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெங்கமேடு சக்திவேல் ஆகியோர் உள்ளனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை முதல்வரின் முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், இசையமைப்பாளர் கலைமாமணி தாயன்பன் ஆகியோர் தங்களது 50–வது திருமண நாளினை முன்னிட்டு, சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் திருமதி சாந்தா ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

### புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் – மாதவரம் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில்

## முதலமைச்சர் பிறந்தநாள் விழா! பள்ளி மாணவர்களுக்கு நல உதவிகள்!

சென்னை, மார்ச் 20- சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் கொசப்பூர் பகுதியில் உள்ள சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் சுமார் 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பள்ளியில் பயிலும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் நலத்திட்ட உதவிகளாக, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நோட்டு புத்தகம், தேர்வு எழுதும் அட்டை, பென்சில் பேனா ரப்பர் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டன.

பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு இனிப்பு வழங்கப்பட்டது.

17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, பகுதி பிரதிநிதி சி. மூர்த்தி, வட்ட துணை செயலாளர் எஸ்.பாலாஜி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகபிரியன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், பாக முகவர்கள் என். நாகராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.